### மாவட்டச் செயலாளர் பி.கே. சேகர்பாபு முன்னிலை! சி.மகேஷ் குமார் தலைமை!

# கொளத்தூர் மேற்கு பகுதியில் கலைஞர் நினைவு நாள் மாபெரும் புகழரங்கம்!

## அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நக்கீரன் கோபால், கலைமாமணி ஏர்வாடி ராதாகிருஷ்ணன் சிறப்புரை!

சென்னை, ஆக.20-

சென்னை கிழக்கு மாவட்டம் கொளத்தூர் மேற்கு பகுதியில் போராளி ஓய்வதில்லை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் எட்டாம் ஆண்டு நினைவு நாளையொட்டி மாபெரும் மாபெரும் புகழரங்கம் போராளி 8 வள்ளுவம் வாழ்த்தும் குறளோவியம்! வணங்கிட வாழ்ந்த அறிவாலயம் மக்கள் நலனே முதன்மையானது அதுவே கலைஞரின் எண்ணமானது" எனும் தலைப்பில் 21.08.2026 - வெள்ளிக்கிழமை அன்று மாலை 6.00 மணி அளவில் சென்னை, அகரம், பெரவள்ளூர் சதுக்கத்தில் தலைமை செயற்குழு உறுப்பினர் சி.மகேஷ் குமார் தலைமையில் சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் பி.கே. சேகர் பாபு. பகுதிக் கழக செய லாளர்கள் எ.நாகராசன் எம்.சி, ஐசிஎஃப். வ.முரளிதரன், கே.சந்துரு, சரிதா மகேஷ் குமார், தேவ ஜவகர், எஸ்.பன்னீர்செல்வம், வானவில் விஜய், எஸ்.தனசேகர், ஆர்.எஸ்.சித்திக், மா. அசோக் குமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.


இரா.தயாளன், எம்.சாக்ரடிஸ், பி.வெங்கடேசன், ஆர்.காஞ்சனா, பி.சூரி, பி. பழனி, இலா இளங்கோவன், எஸ்.கே.ரமேஷ், எம். தாவுத், வி.எல்.டி.காமர்ஸ், எம்.டி.தமிழ்செல்வன், எஸ். முருகன், பா.அதிபதி, எம். ஜே.சி.எஸ்.முருகன், பாபு, என்.ராமச்சந்திரன், என். சௌந்தர், என்.பவுல்ராஜ், பிடிசி.ரவி, கே.பி.ஆதவன், மணி, பி.ஊமைத்துறை, பி.சந்திரசேகர், கே.ஜார்ஜ்குமார், என்.பொன்முடி, ராஜன் என்ற பன்னீர்செல்வம் ஆகியோர் வரவேற்கின்றனர்

இம்மாபெரும் புகழ ரங்கத்தில் திருச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நக்கீரன் பத்திரிகை ஆசிரியர் நக்கீரன் கோபால், கலைமாமணி ஏர்வாடி ராதாகிருஷ்ணன் ஆகியோர் உரையாற்றுகின்றனர்.

மேலும் இம்மாபெரும் மருத்துவ முகாமில் மேயர் பிரியா ராஜன்,டாக்டர் கலாநிதி வீராசாமி எம் பி. இரா.கிரிராஜன்.எம்.பி. வழக்கறிஞர் தாயகம் கவி, அ.வெற்றி அழகன் ப.ரங்கநாதன், கே எஸ் ரவிச்சந்திரன் தமிழன் பிரசன்னா, கார்த்திக் மோகன், ,எஸ் மணி முடி, வே.உமாகாந்த், பி கே மூர்த்தி, எம் விஜயகுமார்,கே எஸ் எம். நாதன், என் பி எம் ஷேக் அப்துல்லா ஆர்.வரதன், தேடல்.புருஷோத்தமன், மாவட்ட நிர்வாகிகள் கோ. ஏகப்பன், ஜி எம் தேவன், இசட் ஆசாத், பகுதி கழகச் செயலாளர்கள் கூ.பீ.ஜெயின், வே வாசு, செ. தமிழ்வேந்தன் எம் சாமி கண்ணு, சொ. வேலு, வி சுதாகர், எஸ் ராஜசேகர், டிஎஸ்பி ராஜகோபால், எம் டி ஆர் நாகராஜ், எஸ் முரளி .பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ் பன்னீர்செல்வம், டி.வி. செம்மொழி, சாவித்திரி வீரராகவன்,கோ மணி, ஏ,பி.பூர்ணிமா, ரமேஷ் (எ) நீலகண்டன், பி.உதயசங்கர், எம் இப்ராஹீம் கனி, இரா. கலைச்செல்வி மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் வானவில் விஜய், ஜெ. பாலமுருகன்,க. வினோத் ,எஸ் தனசேகர், பா ஜெகதீஷ், ஜி.ஜே பிரபு, ஆர்டி சங்கர் நானா, பி.ஸ்ரீராமுலு, நா.ரஞ்சித் விஜயா லயன், நா. துலுக்காணம்,ஜி தாமோதரன், கு கிருஷ்ணமூர்த்தி, பி. ஸ்ரீராமுலு, பி.விஜயகுமார், பா. பிரதீப் குமார் , இரா வீரமணி ,கா.ராஜ்முகம்மது, எம். பெரோஸ் கான்,எல்.சம்பத் குமார், எம் விநாயகம்,ஆர் எஸ் சித்திக், ம.அசோக் குமார் , சுதா தீனதயாளன், ராஜேஸ்வரி ஸ்ரீதர், டாக்டர் ஜி சாந்தகுமாரி, ஜி.வி. நாகவள்ளி, ஸ்ரீதர் மற்றும் கழக நிர்வாகிகள் செயல்வீரர்கள் முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

இப்புகழரங்கத்தில் வட்டக் கழக செயலாளர்கள் கே.ஜார்ஜ்குமார், என். பொன்முடி ஆகியோர் நன்றி கூறுகிறார்கள்.

## குருதி: கருப்பு சிவப்பு / உயிர்: தி.மு.கழகம்



மன்னார்குடி நகராட்சி 33வது வட்ட முன்னாள் பிரதிநிதி காமராஜ் அண்மையில் கழகத்தின் தலைமை நிலையமான அண்ணா அறிவாலயத்திற்கு குடும்பத்தினருடன் வந்தார். கழகத் தலைவர் திராவிட நாயகரைப் பார்க்கும் ஆர்வத்துடன் வந்த அவருக்கு, அன்று அந்த வாய்ப்பு அமையவில்லை. உடம்பில் ஓடுவது கருப்புசிவப்பு ரத்தம் என்ற உணர்வுடனும், தி.மு.க.தான் உயிர் என்ற இலட்சியத்துடனும் அறிவாலயம் முகப்பில் உள்ள பேரறிஞர் அண்ணா முத்தமிழறிஞர் கலைஞர் திருவுருவச் சிலைகள் முன்பாக நின்று படம் எடுத்துக் கொண்டார். அதனை கழக நண்பர்கள் அனைவருக்கும் பகிர்ந்து மகிழ்ந்தார்.

63 வயதான கழக உடன்பிறப்பு மன்னார்குடி காமராஜ் அடுத்த சில நாட்களில் உடல்நிலை பாதிக்கப்பட்டதால் காலமாகிவிட்டார். எந்த நிலையிலும் கழக உணர்வு குறையாத இவரைப் போன்ற கொள்கைக் குடும்பத்தினரால் தான் 75ஆண்டுகளைக் கடந்த ஆலமரமாக நிலைத்திருக்கிறது திராவிட முன்னேற்றக் கழகம்.

### தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டாரத்தில் உள்ள

# 176 பொது விநியோகக் கடைகளில் உள்ள மின்னணுச் சாதனம் செயல்படவில்லை!

## மின்னணு சாதனத்தைத் திரும்ப ஒப்படைத்து வட்டார வழங்கல் அலுவலகம் முன்பு முற்றுகைப் போராட்டம்!



தஞ்சாவூர், ஆக. 20

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டத்தில் 176 ரேஷன்கடைகளில் பொதுவிநியோகத் திட்டத்தின் பாயிண்ட் ஆப் சேல்ஸ் கருவி சர்வர் சிக்னல் கிடைக்காததால் வட்ட வழங்கல் அலுவலகத்தை முற்றுகையிட்டு, பாயிண்ட் ஆப் சேல்ஸ் கருவியை ரேஷன்கடை பணியாளர்கள் வட்ட வழங்கல் அலுவலரிடம் ஒப்படைத்தனர்.

கும்பகோணம் வட்டத்தில் உள்ள 176 ரேஷன் கடைகள் மூலமாக பொது விநியோகத்தட்டத்தின் கீழ் அரிசி, கோதுமை, ஜினி, பருப்பு, பாமாயில் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்படுகிறது. இந்த ரேஷன்கடைகளில் பாயிண்ட் ஆப் சேல்ஸ் கருவி மூலமாக கார்டுதாரர்களின் கைவிரல் ரேகையை பதிவு செய்து அத்தியாவசிய பொருட்கள் வழங்கப்படுகிறது.

இந்நிலையில் 10 நாட்களுக்கு மேலாக ரேஷன்கடைகளில் பாயிண்ட் ஆப் சேல்ஸ் கருவி சர்வர் கோளாறு ஏற்பட்டுள்ளதால் காலையில் முதல் மாலை வரை பொதுமக்களுக்கு ரேஷன்பொருட்களை விநியோகிக்க முடியவில்லையாம். மேலும் ரேஷன்கடைக்கு அத்தியாவசியப் பொருட்கள் வாங்க வரும் பொதுமக்களுக்கும், ரேஷன்கடை பணியாளர்களுக்கும் சர்வர் பிரச்சனையால் தேவையற்ற வாக்குவாதங்கள், தகராறுகள் ஏற்பட்டு வருகிறது.

இந்நிலையில் நேற்று (18ம்தேதி) காலை வழக்கம் போல் ரேஷன்கடைகளுக்கு வந்த ரேஷன்கடை பணியாளர்கள் பாயிண்ட் ஆப் சேல்ஸ் கருவியை இயக்கியபோதும் மீண்டும் சர்வர் சிக்னல் கிடைக்காமல் பிரச்சனை ஏற்பட்டுள்ளது. இதனால் அதிர்ச்சியடைந்த ரேஷன்கடை பணியாளர்கள், தமிழ்நாடு அரசு நியாயவிலைக்கடை பணியாளர் சங்கத்தின் வட்டத்தலைவர் கலைவாணன் தலைமையில், மாவட்ட துணைத் தலைவர் செந்தில்குமார், வட்ட துணை செயலாளர் கார்த்திகேயன், வட்ட துணைத்தலைவர் ஆசைத்தம்பி ஆகியோரின் முன்னிலையில் குடந்தை தாசில்தார் அலுவலகம் முன்பு கூடி பாயிண்ட் ஆப் சேல்ஸ் கருவி சர்வர் பிரச்சனையை தீர்க்கக்கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அதனை தொடர்ந்து ரேஷன் கடைப்பணியாளர்கள் கலைந்து சென்று, தாசில்தார் அலுவலகத்தின் மாடியில் உள்ள வட்ட வழங்கல் அலுவலகத்துக்கு சென்று, தமிழ்நாடு ரேஷன் கடை பணியாளர்களின் கோரிக்கை மனுவை வட்ட வழங்கல் அலுவலர் செந்தில் குமாரிடம் வழங்கி பாயிண்ட் ஆப் சேல்ஸ் கருவியையும் ஒப்படைத்தனர்.

இதுபற்றி ரேஷன் கடைப்பணியாளர்கள் கூறுகையில், பாயிண்ட் ஆப் சேல்ஸ் கருவியில் சர்வர் கோளாறு ஏற்பட்டால் கருவியின் நிறுவனத்தை சேர்ந்த மாவட்ட மேலாளர்கள் அல்லது தாலுகா அளவிலான பொறியாளர்கள் ரேஷன்கடை பணியாளர்களுக்கு உரிய பதில் அளிப்பதில்லை. பொது விநியோகத் திட்டம் சிறப்பாகச் செயல்பட தமிழக அரசு, பாயிண்ட் ஆப் சேல்ஸ் கருவியின் சர்வர் பிரச்சினையைத் உடனடியாகச் சரிசெய்ய வேண்டும். இல்லை என்றால் தமிழ்நாடு ரேஷன்கடை பணியாளர் சங்கத்தின் மாநில முடிவின்படி தொடர் வேலைநிறுத்தப்போராட்டத்தில் ஈடுபடுவோம் என்றார்.

## புதுக்கோட்டையில் முரசொலி மாறன் திருவுருவப் படத்திற்கு மலரஞ்சலி!

புதுக்கோட்டை, ஆக. 20–

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மனசாட்சியாக திகழ்ந்த முன்னாள் ஒன்றிய அமைச்சர் முரசொலி மாறன் அவர்களின் 93 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு புதுக்கோட்டை மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையில் முரசொலி மாறன் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. நிகழ்வில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கவிச்சுடர் கவிதைப்பித்தன், முன்னாள் மாநிலங்களவை உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வி.ஆர். கார்த்திக் தொண்டைமான், மேயர் திலகவதி செந்தில், த.சந்திரசேகரன், செ.அசோக்பாண்டியன், சு.சண்முகம், துணை மேயர் எம்.லியாகத் அலி, வே.ராஜேஷ், அரு.வீரமணி, க.மதியழகன், பெ.ராஜேஸ்வரி, தவ.பாஞ்சாலன், மு.க.ராம கிருஷ்ணன், என்.சாத்தையா, இராசு.சந்தோஷ், செல்லத்துரை, எம்.எம். பாலு, செந்தாமரை பாலு, வி.ஜி.ஆர். மணிவண்ணன், டி.எம்.ஆர்.ராமமூர்த்தி, சி.அரங்கநாயகம், எஸ். வி.ஆர்.ஸ்டாலின் ராஜா மற்றும் கழக உடன் பிறப்புகள் பங்கேற்றனர்.

### மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன் தலைமையில்

# வெங்கத்தூர் முன்னாள் அவைத் தலைவர் கே.என். அர்ஜுனன் இல்லத் திருமண விழா!

## காசி முத்துமாணிக்கம் – ஆவடி சாமு.நாசர் – வி.ஜி.ராஜேந்திரன் மணமக்களை வாழ்த்துகிறார்கள்!

திருவள்ளூர் ஆக.20–

திருவள்ளூர் மேற்கு மாவட்ட வர்த்தக அணி மாவட்ட அமைப்பாளர் கே.ஏ. மதியழகன் – ரமாதேவி தம்பதியரின் மகள் கார்த்திகாவுக்கும், புஷ்பராஜ் – லதா தம்பதியரின் மகன் ஸ்ரீராமுக்கும் திருமண வரவேற்பு மற்றும் திருமண விழா நடைபெற உள்ளது.

திருமண வரவேற்பு நிகழ்ச்சி 22.08.2026 சனிக்கிழமை மாலை 6 மணிக்கும், திருமண மணவிழா 23.08.2026 ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணி முதல் 9 மணி வரையும், திருவள்ளூர் அடுத்த மணவாளநகர் ஒண்டிக்குப்பம் பகுதியில் அமைந்துள்ள CM பேலஸில் நடைபெறுகிறது.

இந்த திருமண விழாவிற்கு திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன் தலைமை வகிக்கிறார்.



ஒன்றிய கழகச் செயலாளர் கே. ஹரிகிருஷ்ணன், கடம்பத்தூர் கிழக்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் மோகனசுந்தரம், முன்னாள் நகர்மன்ற தலைவர் பொன்பாண்டியன் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

மாவட்ட அவைத்தலைவர் கே. திராவிட பக்தன், மாநில விவசாய அணி இணைச் செயலாளர் ஆர். டி.இ. ஆதிசேஷன், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் பி.கே. நாகராஜ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

திருமண நிகழ்ச்சியில் மாநில வர்த்தக அணி செயலாளர் காசி முத்துமாணிக்கம், முன்னாள் அமைச்சர் ஆவடி சாமு. நாசர் ஆகியோர் கலந்து கொண்டு மணமக்கள் கார்த்திகா–ஸ்ரீராமை வாழ்த்துகின்றனர்.

இந்நிகழ்ச்சிகளில் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் வி.ஜி. ராஜேந்திரன், ஆ.கிருஷ்ணசாமி, திருத்தணி எம்.பூபதி, மாவட்ட கழக நிர்வாகிகள் சி.ஜெயபாரதி, பா.உதய மலர்பாண்டியன், ப.சிட்டிபாபு, எஸ். கே.ஆதாம், ஒன்றிய நகர செயலாளர்கள் சி.சு.ரவிச்சந்திரன், எஸ்.மகாலிங்கம், கூளூர் எம்.ராஜேந்திரன், மோ.ரமேஷ், தா.மோதிலால், பிரகாஷ் ஞான ஒளி, மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் ம.கிரண், சரஸ்வதி சந்திரசேகர், எம்.பன்னீர்செல்வம், சித்திக் அலி, என்.நந்தகோபால், மத்தூர் என்.பன்னீர்செல்வம், கோவிந்தம்மாள், டிகே.பாபு, சி.சு.விஜயகுமார், தி.ஆ. கமலக்கண்ணன் மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள் திலீபன், புவனேஷ்குமார், தட்சிண கருணாநிதி, மணிகண்டன், ஆசிரியர் துரை, ஆசிரியர் கந்தசாமி, மப்பேடு சீனிவாசன், ராஜன், ஏ. எஸ்.மணி, நடராஜன், கே.பி.தமிழ்ச்செல்வன், சேகர், பெருமாள், பிரசன்னா குமார், பாலசுப்பிரமணி, ராஜேந்திரகுமார், மாலதி வாசன், சதீஷ் பாஸ்கர், வர்த்தக அணி நிர்வாகிகள் சிவகுமார், ரகுநாதன், பி.ஆர். பிரபாகரன், கார்த்திகேயன், கோபி, ஹரி, கே.ஜி.ஆர். ராஜேஷ்குமார், கேசவன், வாசு, பால்ராஜ், ஜெயவேல், கதிரவன் ஜெயச்சந்திரன், மற்றும் மாநில மாவட்ட நிர்வாகிகள் ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் வார்டு கிளைக் கழக செயலாளர்கள் நிர்வாகிகள் கழக இன்னாள் முன்னாள் நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொள்கிறார்கள்

## ஆடம்பரம்

**சுயமான அறுதிப் பெரும்பான்மை இல்லாமல் முட்டுத் தூங்கலில்
முளைத்து நிற்கும் ஷோபா மாடல் ஆட்சி**

**அவசியமே இல்லாமல் 5.50 கோடியில் புதிய முதலமைச்சர் அலுவலகம்..
சுமார் 60 கோடியில் பஞ்சத்தில் வாடும்
எம்.எல்.ஏ.க்களுக்கு சொகுசு கார் என...
மக்கள் வரிப்பணத்தை
தனது கோட்டு மாடல் குதியாட்டத்தால் ஆடம்பரத்தில் கரைக்கிறது.**

**இந்த ஊதாரி ஆட்சி தமிழ்நாட்டை பீகாருக்குப் பின்னால் நிறுத்தாமல் ஓயாது...**

**என்னநாஞ் சொல்றது**



**மருது அழகுராஜ்**
கழகச் செய்தித் தொடர்புக் குழு துணைத் தலைவர்



திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில், "கழகத்தின் வேர்களைத் தேடி என்ற தலைப்பில், கழகத்தின் ஆணிவேராகத் திகழும் கிளைக் கழக நிர்வாகிகளை நேரில் சந்தித்து அவர்களுடன் கலந்துரையாடும் நிகழ்ச்சி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அதன் தொடர்ச்சியாக, இரா.கி பேட்டை மேற்கு ஒன்றியம் வீரமங்கலம் கிளை கழக நிர்வாகிகளை திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன் அவர்களின் இல்லங்களிலே சந்தித்து கலந்துரையாடினார். உடன் ஒன்றிய செயலாளர்கள் ம.இரகு, சி.என்.சண்முகம், மற்றும் ரமேஷ், சிலம்பு பன்னீர்செல்வம், வழக்கறிஞர் ரகு உள்பட திமுக நிர்வாகிகள் உள்ளனர்.

